Toronto District School Board

ஆகஸ்ட் 26, 2020

அன்பான பெற்றோரே/பாதுகாவலரே மற்றும் குடும்பத்தினரே,

ஆகஸ்ட் 21 அன்று, செப்டெம்பர் மாதத்தில் பாடசாலைக்குத் திரும்புவது பற்றிய ஒரு கடிதம் அனைத்து TDSB பெற்றோருக்கும்/பாதுகாவலருக்கும் அனுப்பப்பட்டது. அத்துடன் விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்/பாதுகாவலருக்கான மேலதிக தகவல்களை நாங்கள் இன்று உங்களுக்குத் தருகின்றோம். TDSB பாடசாலைகளை நாங்கள் திறந்து மாணவர்களை ஒரு சில வாரங்களில் மீண்டும் வரவேற்கும்போது எதை எதிர்பார்க்கலாம் என மேலும் அறிவதற்கு நீங்கள் ஆவலாக இருப்பீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும், எனவே நாங்கள் இந்தப் புதுப்பிக்கப்பட்ட விபரமான தகவல்களை உங்களுக்கு வழங்க விரும்புகின்றோம்.

முதலாவதாக, மாணவர்களும் பணிபுரிவோரும் பாதுகாப்பாகப் பாடசாலைக்கும் பணிக்கும் திரும்புவதற்குத் தேவையான அனைத்துத் திட்டமிடல்கள் ஊடாகவும் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கும்போது, நீங்கள் தொடர்ந்து காட்டும் பொறுமைக்கு நாங்கள் உங்களுக்கு நன்றி கூற விரும்புகின்றோம். இது ஒரு எளிதான அல்லது நேரடியான செயல்முறையாக இருக்கவில்லை, அத்துடன் நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது தொடரும் உங்களுடைய புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகின்றோம். மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்பொருட்டு பாதுகாப்பாகப் பாடசாலைக்குத் திரும்புதலை வினைத்திறனுடையதாகத் திட்டமிடுவதற்காக நாங்கள் எங்களால் இயன்ற அனைத்தையும் செய்துகொண்டிருக்கின்றோம் என்பதைத் தயவுசெய்து அறிந்திருங்கள்.

மாற்றுத்திறன்கள் உள்ள மாணவர்களுக்கான கல்வி, வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்குச் சமமான அணுகுதல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு TDSB உறுதிபூண்டுள்ளது, அத்துடன் COVID-19 தொற்றுக்காலத்தில் இது தொடர்ந்தும் யதார்த்தமாக இருக்கும். குறிப்பாக விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கான மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து கீழே பார்க்கவும்.

**<u>தாமதமாகத் தொடங்குதல்: செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 15</u>**

பாடசாலைக்கு மீண்டும் பாதுகாப்பாகத் திரும்புதலுக்குத் தயார்செய்வதற்குத் தேவைப்படும் நேரத்தைக் கருத்தில்கொள்ளும்போது, பாடசாலை தொடங்கும் முதல் நாளை (ஆரம்பநிலை, இரண்டாம்நிலை மற்றும் மெய்நிகர் பாடசாலை) **<u>செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 15</u>** ஆம் திகதிக்கு TDSB மாற்றியுள்ளது.

அனைத்து வகுப்புகளினதும் நுழைவு மூன்று நாட்களுக்கு ஊடாக நிகழும் வகையில் மாற்றப்பட்டபோதிலும், ***விசேட கல்வித் தேவையுள்ள அனைத்து மாணவர்களுக்கும் செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 15 அன்று பாடசாலை ஆரம்பமாகும்.*** இது தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் அனைத்து ஆரம்பநிலை, இரண்டாம்நிலைப் பாடசாலைகளையும், இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் நடாத்தப்படும் விருத்தியில் குறைபாடுகளுள்ள மாணவர்களுக்கான தீவிர ஆதரவுச் செயற்திட்டங்களையும் (Developmental Disabilities Intensive Support Programs (ISP)) உள்ளடக்கும். பேருந்தில் பாடசாலைக்குச் செல்லும் விசேட கல்வித் தேவைகளுள்ள மாணவர்களுக்கும் செப்டெம்பர் 15 ந் திகதி பாடசாலை தொடங்கும்.

**<u>முகக் கவசம்/முக மறைப்பு வழிகாட்டிகள்</u>**

மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் TDSB கட்டிடங்களிலும் பாடசாலைப் பேருந்துகளிலும் முகக் கவசங்கள்/முக மறைப்புகள் அணியுமாறு வேண்டப்பட்டபோதும், எங்களுடைய மாணவர்களில் சிலருக்கு மருத்துவரீதியான, புலன் சார்ந்த அல்லது வேறு காரணங்களுக்காக விதிவிலக்குகள் தேவைப்படும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். முகக் கவசங்கள் அல்லது முக மறைப்புகள் தொடர்பில் விதிவிலக்குகள் அல்லது தேவையான அனுசரணைகள் பற்றி நேரடியாகப் பாடசாலைகளுடன் கலந்துரையாடுமாறு பெற்றோர்/பாதுகாவலர் வேண்டப்படுகின்றனர்.

எங்களுடைய தொழில்சார் சுகாதார & பாதுகாப்புப் பிரிவு தெளிவாகத் தெரியும் முகக் கவசங்களை, அவை தேவைப்படும் பணியாளர் மற்றும் மாணவர்களுக்காகக் கொள்வனவு செய்வதற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். முகக் கவசங்கள்/முக மறைப்புகள் பற்றிய மேலதிக விபரங்கள் விரைவில் பெற்றோர்/பாதுகாவலருடன் பகிர்ந்துகொள்ளப்படும்.

**<u>கற்கை மாதிரிகள்</u>**

**ஆரம்பநிலை**

விசேட கல்விக்கான தீவிர ஆதரவு செயற்திட்டங்களிலுள்ள (Intensive Support Programs (ISP)) ஆரம்பநிலை வகுப்புகள், எந்த ISP திட்டம் (Gifted தவிர்ந்த) என்பதைப் பொறுத்து 6 முதல் 16 மாணவர்களாகக் குறைக்கப்படுகிறது. மாணவர்கள் வாரமொன்றுக்கு 5 நாட்கள், இடைவேளை மற்றும் மதிய உணவு இடைவேளை உள்ளடங்கலாக, முழு நாளும், ஒரு பிரிவாக/குழுவாகப் பாடசாலைக்குச் சமூகமளிப்பார்கள்.

இது எங்களுடைய தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் ஆறு ஆரம்பநிலை பாடசாலைகளை உள்ளடக்குகின்றது: Beverley School, Lucy McCormick Senior School, Park Lane Public School, Seneca School, Sunny View Junior மற்றும் Senior Public School, அத்துடன் William J McCordic.

அதிக பட்சம் உடல்ரீதியாக விலகி இருப்பதற்கு உதவுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் தொடர்பில் சில மாணவர்கள் சவால்களை எதிர்கொள்ளலாம் என்பது எங்களுக்குத் தெரியும். இந்தக் கரிசனைகளைக் கையாளும்பொருட்டு, இந்த நேரத்தில் பாடசாலைகள் மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறந்த முறையில் ஆதரவளிப்பதற்காக குடும்பத்தினருடனும் விசேட கல்வி & உள்ளீட்டு ஆலோசகர்களுடன் இணைந்து பணியாற்றும்.

**இரண்டாம்நிலை (தரம் 9 முதல் 12 வரை)**

விருத்தியில் குறைபாடுகளுள்ள மாணவர்களுக்கான விசேட கல்வி (DD) தீவிர ஆதரவு செயற்திட்டங்களிலுள்ள (Intensive Support Programs (ISP)) இரண்டாம்நிலை வகுப்புகளில் 10 மாணவர்களாகக் குறைக்கப்படும், மாணவர்கள் ஒரு குழுவாகப் பிரிக்கப்படுவதாலும் அவர்களுடைய அனைத்து விசேட கல்வி வகுப்புக்களுக்கும் ஒன்றாகச் செல்லலாம் என்பதாலும் மாணவர்களால் தினசரி பாடசாலைக்குச் சமூகமளிக்கக் கூடியதாக இருக்கும். மாணவர்கள் semester (அரையாண்டு) முறையைப் பின்பற்றுவார்கள்.

விசேட கல்விக்கான வகுப்புகள் மற்றும் வழமையான பாடசாலை பாடநெறிகளுக்கென நேரசூசிகையைக் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட (Gifted உள்ளடங்கலாக) ISP வகுப்புகளிலுள்ள இரண்டாம்நிலை மாணவர்கள் தமது சக மாணவர்களுடன் தொடர்ந்து ஒன்றிணைக்கப்படுவார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக quadmester (நான்கு தவணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள) இரண்டாம்நிலை பாடசாலை மாதிரிக்குச் சமூகமளிப்பார்கள்.

இரண்டாம்நிலை ISP, 6 முதல் 16 வரை மாணவர்களாகக் குறைக்கப்பட்டிருக்கும். விசேட பாடநெறிகளை கற்பதற்கு மாணவர்கள் ஒரு குழுவாகக் சமூகமளிக்கமுடியும். வழமையாக, இந்த ISP க்கள் MID, LD, ASD, DHH மற்றும் PD ஐ உள்ளடக்குவதுடன் விசேட கல்விமுறை இல்லாத பாடநெறிகளுக்கு அவர்களுடைய சக மாணவர்களுடன் குழுக்களாக்கப்படலாம். Gifted ISP வகுப்புகள் 30 மாணவர்களாகக் குறைக்கப்படுவதுடன் விசேட கல்வி மற்றும் விசேட கல்விமுறை இல்லாத வகுப்புகளுக்காக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பாடசாலைக்குரிய தேவைகளின் அடிப்படையில் இது இடத்திற்கேற்ப மாற்றமடையலாம்.

மாணவர்கள் தினசரி சமூகமளிக்கக்கூடிய இந்த ஆறு தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் இரண்டாம்நிலைப் பாடசாலைகளும் Semester (அரையாண்டு) முறையைப் பின்பற்றுவார்கள். தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் இந்த இரண்டாம்நிலைப் பாடசாலைகள் ஆவன: Central Etobicoke High School, Drewry Secondary School, Frank Oke Secondary School, Maplewood High School, Sir William Osler High School, மற்றும் York Humber High School.

**மெய்நிகர் பாடசாலை (பாலர்வகுப்பு முதல் தரம் 12 வரை)**
தங்களுடைய பிள்ளைகள் வீட்டிலிருந்து கற்பதை விரும்பும் பெற்றோர்/பாதுகாவலர் தொலைதூரக் கற்கை முறையைத் தேர்ந்தெடுக்கலாம். மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து வலைத்தளத்தைப் பார்வையிடவும். ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை.

பெற்றோர்/பாதுகாவலர் தொலைதூரக் கல்வி முறையைத் தொடங்குவதெனத் தீர்மானித்துவிட்டு, பின்னர் பாடசாலையில் நேரில் கற்கும் முறைக்குத் திரும்புவதெனத் தீர்மானித்தால், மாணவர்கள் தங்களுடைய ISP இட அமர்வை இழந்துவிடமாட்டார்கள். பாடசாலை ஆண்டில் குறித்த திகதிகளில் மெய்நிகர் பாடசாலைக்குள் நுழைய அல்லது நேரில் கற்கும் முறைக்குத் திரும்புவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கும். ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை நிலைமாற்றங்களுக்கான திகதிகளைப் பார்வையிடுங்கள். குறிக்கப்பட்ட நேரங்கள் தவிர்ந்த நேரத்தில் ஒரு மாற்றம் தேவைப்பட்டால், விதிவிலக்குகள் வழங்கப்படலாம் அத்துடன் அவை அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அதிபர்களால் பரிசீலிக்கப்படும்.

**பாடசாலையில் நேரில் அல்லது மெய்நிகர் கற்கைக்கான பதிவு**
இந்த வாரம், நேரில் கற்பதற்கு அல்லது தொலைதூரக் கற்கைக்குப் பதிவுசெய்யுமாறு வேண்டும் மின்னஞ்சல் ஒன்று, தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் இரண்டாம் நிலை பாடசாலை ஒன்றுக்குச் சமூகமளிக்கும் மற்றும் இரண்டாம் நிலை DD ISP இல் இருக்கும் அனைத்து மாணவர்ககளினதும் பெற்றோர்/பாதுகாவலருக்கு, அனுப்பப்படும்.

அனைத்துப் பெற்றோரும்/பாதுகாவலரும், இந்த மாதம் ஏற்கனவே முன் பதிவுக் கருத்தாய்வுக்குப் பதிலளித்திருந்தவர்கள் உட்பட, இந்தப் பதிவைப் பூர்த்திசெய்வதன் மூலம் தங்களுடைய பிள்ளைகளின் பதிவை உறுதிசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாணவருக்கும் இணையப் பதிவுப் படிவத்திற்கான தனிப்பட்ட இணைப்பொன்றை அந்த மின்னஞ்சல் உள்ளடக்கும், அத்துடன் இந்த இணைப்பு பகிரப்பட முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட

பிள்ளைகள் இருக்கும் பெற்றோர்/பாதுகாவலருக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு மின்னஞ்சல்படி கிடைக்கும், அத்துடன் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியான பதிவைப் பூர்த்திசெய்யுமாறு அவர்கள் வேண்டப்படுவார்கள். இணையப் பதிவு இருபது வித்தியாசமான மொழிகளில் கிடைக்கப்பெறும்.

கோப்பில் மின்னஞ்சல் முகவரி ஒன்று இல்லாத அல்லது இணையப் பதிவைப் பூர்த்தி செய்யாத பெற்றோர்/பாதுகாவலருக்கு மாத்திரம் தமது தெரிவைச் செய்யுமாறு கேட்கும் பதிவுக்கான தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப்பெறும். மேலதிக தகவல்களுக்கும் பதிவுக்கான வேறுபட்ட தெரிவுகள் பற்றி அறிவதற்கும் TDSB வலைத்தளத்தைப் பார்வையிடுமாறு அனைத்துப் பெற்றோரையும்/பாதுகாவலரையும் நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

**புதன்கிழமை, ஆகஸ்ட் 26:** அனைத்துப் பெற்றோர்/பாதுகாவலருக்கும் மின்னஞ்சல் அனுப்பப்படுவதுடன் பதிவுசெய்தல் ஆரம்பமாகும்
**திங்கட்கிழமை, ஆகஸ்ட் 31**: தீவிர கற்பித்தல் செயல்படுத்தப்படும் பாடசாலைகள் மற்றும் இரண்டாம்நிலை DD ISP மாணவர்களுக்குரிய பதிவுசெய்தல் முடிவடையும்

**அடுத்த படிமுறைகள்**
எதிர்வரும் நாட்களில், நாங்கள் குடும்பத்தினருக்குத் தொடர்ந்து அறிவிப்பதுடன் அண்மித்த தகவல்களையும் வழங்குவோம். அனைவரது அபிப்பிராயங்களும் கரிசனைகளும் உள்வாங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் எங்களுடைய நிர்வாகிகள், விசேட கல்வி ஆலோசனைக் குழு பாடசாலைக்குத் திரும்புதல் உப குழு, மற்றும் பாடசாலையில் விசேட கல்விக்குத் திரும்பும் பணியாளர்கள் மற்றும் உள்ளடக்கல் உப குழு ஆகியோருடன் தொடர்ந்து இணைந்து நெருங்கிப் பணியாற்றுகின்றோம். பாடசாலைகளுக்கான எங்களுடைய சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

இந்த முக்கிமான பணி தொடரும் இவ்வேளையில், தொடர்ந்து நீங்கள் காட்டும் பொறுமைக்கு நாங்கள் உங்களுக்கு மீண்டும் நன்றி கூறுகின்றோம். இயன்றளவு விரைவில் பாடசாலை அதிபர்கள் குடும்பத்தினருடன் குறித்த பாடசாலை தொடர்பான தகவல்களை நேரடியாகப் பகிர்ந்து கொள்ளத் தொடங்குவார்கள் என்பதைத் தயவுசெய்து அறிந்துகொள்ளுங்கள். உங்களிடம் பல கேள்விகளும் கரிசனைகளும் இருக்குமென்பதை நாங்கள் அறிவோம். மேலும், தேவையான தகவல்களை வழங்குவதற்கும் அவை பற்றி உங்களுக்குத் தொடர்ந்து அறியத்தரவும் பணியாளர்கள் தங்களால் இயன்றவரை தொடர்ந்து திறம்படச் செயலாற்றுவார்கள்.

நாங்கள் இதில் ஒன்றிணைந்து இருப்பதுடன் மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு பொது இலக்கை நாங்கள் அனைவரும் பகிர்ந்துகொள்கின்றோம். பாடசாலைக்கு மீண்டும் திரும்புதல்

Toronto District School Board

ஒவ்வொருவருக்கும் இயன்றவரை இலகுவாக இருக்கவேண்டுமென நாங்கள் விரும்புவதுடன் இது நிறைவேறுவதற்கு நாங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்து பணிபுரியவேண்டும்.

உண்மையுள்ள,

Carlene Jackson
Director of Education (கல்வி அதிகாரி)

Alexander Brown
Chair (தலைவர்)

---